**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2022**
**A021 இலக்கணம் – 2 (சொல்)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2 இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சொல் என்னும் பொருளைத் தரும் வேறு சொற்கள் யாவை?
2. இலக்கிய வகையில் சொற்கள் எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
3. பால் என்பதன் பொருள் என்ன?
4. புகழ்ந்தாரைப் போற்றி வாழ் – இதில் வந்துள்ள வேற்றுமை உருபு யாது?
5. எச்சம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. பகுத்தால் பொருள் தராதது எது?
7. இடைச்சொல் எத்தனை வகைபடும்?
8. குழையன் என்ற பெயர்ச்சொல்லில் இடம்பெற்றுள்ள இடைச்சொல் யாது?
9. சாரியைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
10. முத்துப்போன்ற பல் – இதில் இடைச்சொல் எது?
11. வினாப்பொருளைத் தரும் இடைச்சொற்கள் யாவை?
12. உயிர்ப்பொருள்கள் எத்தனை வகைப்படும்?
13. உரிச்சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
14. ஒலி, கலி – எக்குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள்?

15. விடை எத்தனை வகைப்படும்?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பொது மொழி என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
2. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
3. தற்கிழமை என்றால் என்ன? சான்று தருக.
4. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்றால் என்ன? சான்று தருக.
5. ஒரு குணம் தழுவிய உரிச்சொல் என்றால் என்ன? எ.கா.தருக.
6. கட்டளை வாக்கியம் – குறிப்பு வரைக.
7. இயற்பெயரையும் சிறப்புப் பெயரையும் சொற்றொடர்களில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?
8. பூட்டுவில் பொருள்கோள் என்றால் என்ன? சான்று தருக.

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்கள் பற்றி விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) பெயர்ச் சொல்லின் வகைகளை விளக்குக.

2. (அ) வினைச் சொல்லின் பொது இலக்கணம் கூறுக.

(அல்லது)

(ஆ) பகுபத உறுப்பிகளின் தன்மைகளை விவரிக்க.

3. (அ) பலகுணம் தழுவிய உரிச்சொல் குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) விடைகள் என்றால் என்ன? அதன் வகைகள் குறித்து விளக்குக.

***